கனம் தலைமை குற்றவியல் நடுவர் / சிறப்பு நீதிபதி இராமநாதபுரம் அவர்கள் முன்பாக

**Under Section 173 BNSS**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(குற்றவியல் நடைமுறை விதிகள் பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120305

1. District : மாவட்டம் இராமநாதபுரம் PS: காவல்நிலையம் ஊ.த.க பிரிவு Year: ஆண்டு FIR No.: மு.த.அ. எண் 03/2025 Date: நாள் 07.02.2025

2. (i) Act சட்டம்: PC Amendment Act 2018 Sections பிரிவுகள்: 7 (a) of P.C. Amendment Act, 2018
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 04.02.2025 முற்பகல் சுமார் 11.00 மணி
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.02.2025 Time : நேரம் 13.20 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் தொகுதி-I Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 45 கி.மீ வடக்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், பகவதி மங்கலம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ.செல்வராசு (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அங்கானந்த
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 40/2025 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம் & சமையல் (g) Address : முகவரி கீழமுந்தல், பகவதிமங்கலம், ஆர்.எஸ். மங்கலம் தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   பார்த்திபன், VAO, பகவதிமங்கலம் குரூப்,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதம் ஏதுமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கிறேன் : M.குமரேசன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 07.02.2025 ஆம் தேதி 13.20 மணிக்கு அலுவலக பணியில் இருக்கும் போது வாதி செல்வராசு ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார்தாரர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ்.மங்களம் தாலுகா, பகவதி மங்களம் குரூப் கிராம நிர்வாக அலுவலர் திரு.பார்த்திபன் என்பவரது முன் நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும் புகார் குறித்த விபரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்றும், இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.03/2025 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன் படி இன்று 07.02.2025ஆம் தேதி 13.50 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் பின்வருமாறு அனுப்புநர் அ. செல்வராசு, வயது 40/2025 த/பெ அருளாந்து, குமிழேந்தல், பகவதி மங்களம் குரூப், ஆர்.எஸ்.மங்கலம் தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம். பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, இராமநாதபுரம் அய்யா, நான் மேலே கண்ட முகவரியில்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

அ.செல்வராசு 7-2-2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 07/02/2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

07.02.2025 – 14.00 மணி

Name: பெயர் M.குமரேசன்
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு,
இராமநாதபுரம்.

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 03/2025 u/s 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் தொடர்ச்சி

வசித்து வருகிறேன். நான் விவசாயம் மற்றும் சமையல் வேலை செய்து வருகிறேன். கடந்த 24.01.2025 மற்றும் 25.01.2025 ஆம் தேதிகளில் எங்களது தகப்பனார் பெயரில் உள்ள பகவதி மங்களம் குரூப் பட்டா எண் 150 ல் கண்ட சொத்துக்களை நானும் எனது 4 சகோதரர்களும் தனித்தனியாக திருவாடனை சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்தோம். பின் 27.01.2025 ஆம்தேதி மதியம் பகவதி மங்களம் குரூப் கிராம நிர்வாக அலுவலர் திருபார்த்திபன் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பட்டாமாறுதல் சம்மந்தமாக மெசேஜ் வந்துள்ளது நீங்கள்அது சம்மந்தமான ஆவணங்களுடன் விஏஓ அலுவலகம் வருமாறு சொன்னார். அதன்பிறகு 04.02.2025 ஆம் தேதி காலை 11.00 மணியளவில் விஏஓ அலுவலகம் சென்று என்னுடைய சொத்திற்கு பட்டா பெயர் மாற்றம் செய்வது பற்றி விபரம் கேட்டேன். அதற்கு விஏஓ திரு.பார்த்திபன், எனது பெயரில் உள்ள 2 பத்திரங்களின் ஜெராக்ஸை என்னிடம் பெற்றுக் கொண்டு. பட்டா பெயர் மாற்றம் செய்ய மேலதிகாரிக்கு பரிந்துரை செய்து பட்டா பெற்றுத்தர ரூ.37,000/- தனக்கு தனியாக தரணும் எனகேட்டார். நான் அதற்கு பணமெல்லாம் என்னால கொடுக்க முடியாது நானே அன்னாடம் காச்சி என்று கூறியதற்கு, விஏஓ பணமில்லாம எதுவும் நடக்காது எனக்கூறினார் அதற்கு எதுவும் பேசாமல் வந்து விட்டேன். பின்னர் மீண்டும் ஒரு முறை நேரில் வேண்டிக் கேட்டுக் கொண்டால் அவர் மனம் மாறலாம் என நினைத்து இன்று 07.02.2025 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் பகவதி மங்களம் விஏஓ அலுவலகம் சென்று விஏஓ திருபார்த்திபன் அவர்களை மீண்டும் சந்தித்து எனது பட்டா பெயர் மாறுதல் குறித்து கேட்டதற்கு ஏற்கனவே அவர் கேட்ட ரூ.37,000/-ஐ சாயங்காலத்துக்குள்ள கொண்டு வந்து பாருங்க என கராராக கூறினார் . நான் அதற்கு எதுவும் பேசாமல் அங்கிருந்து வெளியில் வந்து அது பற்றி நான் யோசித்து பார்த்தபோது அரசு பணியை செய்ததற்கு லஞ்சமாக

ரூ.37,000/- ,எதற்கு கொடுக்க வேண்டும் என யோசித்து பார்த்து அரசு பணியை செய்வதற்காக என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட ஆர்.எஸ்.மங்களம் தாலுகா, பகவதி மங்களம் குரூப் கிராம நிர்வாக அலுவலர் திரு.பார்த்திபன் என்பவர் மீது புகார் செய்ய முடிவு செய்தேன். ஆகவே, என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட ஆர்.எஸ்.மங்களம் தாலுகா, பகவதி மங்களம் குரூப் கிராம நிர்வாக அலுவலர் திரு.பார்த்திபன் என்பவர் மீது தக்க நடவடிக்க எடுக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) அ. செல்வராசு. Received the complaint on 07.02.2025 at 13.20 hrs and Enquired, the Character and Antecedents of the complainant and Accused and registered a case in Ramnad V&AC, Cr.No.03/2025 u/s 7 (a) of P.C. Amendment Act 2018 at 13.50 hrs. (Sd) M.Kumerasan,. Inspector of Police. V&AC, Ramanathapuram 07.02.2025. இதன் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து கனம் தலைமைக்குற்றவியல் நடுவர் நீதிபதி/சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

07/02/2025

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் [illegible]
இராமநாதபுரம்.